# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 118 இதழ் : 02 24–01–1992 ( ஜன. 24 — பெப். 07 ) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50


### சிறுகதை

பத்திரிகைக்கு சிறுகதைகளை எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம். படிப்பினை ஊட்டுபவையாக சமூக சீர்கேடுகளைப் படம்பிடித்துக் காட்டுபவையாக அல்லது புரட்சிக் கருத்துக்களைக் கொண்டவையாக அமையலாம். கதை வெள்ளைத்தாளில் 3 பக்கங்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். பிரசுரிக்கப்படாதவை திருப்பி அனுப்பப்படமாட்டா.

## 1991இல் ஒன்பது மாத பயிற்சி நெறியில் பங்குபற்றித் தேறியோர்க்கு பட்டமளிப்பு

# உளவளத்துணை நிலைய பட்டமளிப்பு விழா

"இன்றைய காலம் எமது மக்கள் வரலாற்றில் ஒரு பருவத்திலிருந்து மற்றொரு பருவத்துக்கு அடியெடுத்துவைக்கும் காலமாகும். அடுத்த நிலைக்கு மாறிக்கொண்டிருக்கும் மக்கள் இந்த இடையீட்டுக் காலத்தில் ஏற்பட்ட பயங்கர அனுபவங்களால் உளவியல்ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மனத்துயர், பதற்றம், அச்சம் முதலியவற்றால் பாதிப்புற்ற மக்களின் உளப்புண்களை ஆற்றும் பணியில் சாந்தியகம் ஈடுபட்டுள்ளது" என சாந்தியகத்தின் நிர்வாக இயக்குநரான அருட்திரு. சா. ம. செல்வரட்ணம் அடிகளார் கூறினார்.

சாந்தியகம் உளவளத்துணை நிலையத்தில் உளவளத் துணையாளர்களாக 91 இல் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தின்போதே . அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வைபவம் இம்மாதம் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை தொடர்பகத்தில் உளவியல் சங்கத்தின் தலைவர் திரு. ஜீவேஸ்வரா தலைமையில் நடைபெற்றது.

செல்வரட்ணம் அடிகளார் மேலும் பேசுகையில்,

"சித்திரவதையினாலும் பிற தாக்கங்களினாலும்பாதிப்புற்றவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நோக்குடன் 1988 இல் சாந்தியகம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் நாட்டின் போர் நிலைமை காரணமாக பெருந்தொகையான மக்கள் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்ய சாந்தியகத்தின் சேவை இன்னும் விரிவாக்கப்படவேண்டும். பாடசாலைகளிலும், ஆசிரியர்மத்தியிலும், பல்கலைக் கழகத்திலும் அதன் பணி விஸ்தரிக்கப்படவேண்டும்.

இன்று எமது கல்விமுறையானது அறிவைத் திணித்து பரீட்சைகளில் சித்தி பெறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. கல்வியானது அறிவை மட்டுமல்லாது அன்பையும் உணர்வையும் விருத்தி செய்வதாக அமையவேண்டும். அப்போதுதான் எமது வருங்கால சமுதாயம் வளமுள்ளதாக அமையும்'' எனக் குறிப்பிட்டார்.

வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் திரு. அ. துரைராஜா அவர்கள் இக்கால கட்டத்தில் சாந்தியகம் ஆற்றி வரும் சேவையைப் பாராட்டியதுடன், உயர்கல்வி பெறுவோர் உத்தியோகம் நாடிச் செல்லாது சுயமுயற்சியால் நாட்டை முன்னேற்ற வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினார்.

இவ்வைபவத்தின்போது அரசசார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக் கழகம், கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் பிரமுகர்கள், பாடசாலை அதிபர்கள், பத்திரிகையாளர் ஆகியோரும் பிற அன்பர்களும் சமுகமாயிருந்தனர்.

## கத். சங்கத்தின் அரசியல் விழிப்புணர்ச்சி

பூனேயிலுள்ள கத்தோலிக்க சங்கம் அதன் அங்கத்தவர்களின் சார்பில் தேர்தல் டாப்புகளை பரிசீலனை செய்யவிருக்கிறது. எதிர்வரும் லோக்சபா தேர்தலின் பொருட்டும் பல அங்கத்தவரின் பெயர்கள் தேர்தல் டாப்பில் இல்லாததாலும் இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சங்கத்தின் அங்கத்தவர் சந்தா ரூபா 5/– ஆகும். ஆயுள் அங்கத்துவம் ரூபா 50/–

## அருள்திரு S. எட்மன்ட் றெஜினோல்ட் அ.ம.தி குருவாகத் திருநிலைபபடுத்தப்பட்டார்



அருள்திரு. S. எட்மன்ட் றெஜினோல்ட் அ.ம.தி. அவர்கள் கடந்த 23.1.1992 இல் இறைவனின் குருவாக யாழ். புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் யாழ் ஆயர் பேரருட் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இளவாலை றோ. க. த. ஆண்கள் பாடசாலை அதிபர் திரு. ஆ. சவிரிப்பிள்ளை, திருமதி. மொனிக்கம்மா சவிரிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனான இவர் மாரீசன் கூடலில் 20.5.1961 இல் பிறந்தார்.

தமது ஆரம்ப, இடைநிலை கல்வியை இளவாலை தி. கு. கன்னியர் மடம் பாடசாலை மானிப்பாய் புனித அன்னம்மாள் வித்தியாசாலை, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, கொழும்புத்துறை புனித யோசப் வித்தியாலயம், யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம். யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கற்றார்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## திருத்தந்தையிடமிருந்து யாழ். ஆயருக்கு வாழ்த்து

**யாழ். ஆயர் பேரருள்திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகைக்கு அவரது குருத்துவ பொன்விழாவையொட்டி திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் பின்வரும் வாழ்த்துக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.**

*வணக்கத்துக்குரிய சகோதரரே!*

முன்புபோலவே, இன்றைய காலத்தில் இன்னும் அதிகமாக அண்மையில் நிகழவிருக்கும் உங்கள் குருத்துவ அபிஷேகத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை நினைவு கூர்வது தக்கதேயாம். மலரும் இளமைப் பருவத்தை இங்கு ரோமாபுரியில் நீங்கள் கழித்ததும், மானிட, மறையியல் பயிற்சிகளைப் பெற்று, அவற்றின் உதவியுடன் மறைப்பணியை ஆரம்பிப்பதற்கு வேண்டிய வழிதுறைகளையும் ஆதாரத்தையும் அடைந்துகொண்டதும் இந்நினைவுகூர்தலில் அடங்கும்.

நாம் நன்கு அறிந்துள்ளபடி இறைவனின் இந்தப் பணிக்களமானது பல்லாண்டுகாலமாக நற்செய்திப் பணியாளர்கள் விதைத்த விதையிலிருந்து சிறந்த அறுவடையைத் தரும் என்ற நம்பிக்கையை அளித்தது. இறைவனின் உதவியுடன் உங்கள் பற்றார்வமுள்ள விடா முயற்சியின் பலனாக அது இன்னும் மிகுந்த பலன் தரக்கூடியதான வளம் பெற்று விளங்குகிறதெனக் கருதுகிறோம்.

திருச்சபை நிறுவனங்களையோ, முற்றும் அப்பாவிகளான மக்களையோ பொருட்படுத்தாத, குமுறும் உள்நாட்டுப் போரினால் விசுவாசிகளுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல், இடையூறுகள் எமக்குத் தெரியாத தொன்றல்ல.

வணக்கத்துக்குரிய சகோதரரே, உங்கள் பெருவிழா அடுத்திருக்கும் இவ்வேளையில் இந்த அழிவுகளைப்பற்றிக் குறிப்பிடுவதற்கு மிகவும் மனம் வருந்துகிறோம். இறைவன் உங்கள் மட்டிற் காட்டிய பெருந் தயவையும், திருச்சபையின் முன்னேற்றத்தையும் உங்களுடன் எண்ணிப் பார்ப்பதே எமது விருப்பம். ஆனால் உங்களுடன் முற்றும் இணைந்திருக்க வேண்டுமென்ற விருப்பத்தால் உங்கள் துயரங்கள் கவலைகளைப் பகிர்ந்துகொள்ளவிழைகின்றோம்.

ஆகவே எமக்கிடையே நெடுந்தூரம் இருந்த போதிலும் உங்களது பொன்விழாவை நீங்கள் கொண்டாடுகையில், உள்ளத்திலும், ஆன்மாவிலும் இசைவுடன் பாராட்டுவோம். உங்கள் உழைப்பின் அடையாளமான நினைவுச் சின்னங்களைக் கொண்ட திருச்சபைச் சமூகத்தைப் பேணி வளர்ப்பதில் நீங்கள் செலவிட்ட பல ஆண்டுகளுக்கு சான்றாக உள்ள அனைத்தும் ஒன்றுசேர உங்களைப் பாராட்டுவது போல இது அமையும்.

ஒரு பற்றுமிக்க பாதுகாவலராக ஞானத்துடனும், அறி

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## ஆசியத் திருச்சபையைக் கட்டியெழுப்புதல்

கிழக்காசிய மேய்ப்புப்பணி நிலையத்தில் 1992ஆம் ஆண்டில் இரு சர்வதேசக் கருத்தரங்குகள் நடைபெறவிருக்கின்றன. ஒன்று கலாச்சாரமயமாக்குதல் பற்றியது, மற்றது அகதிகள் பற்றியது.

உலகின் காத்திரமான பிரச்சினைகள் மட்டில் திருச்சபை ஈடுபாடு காட்டுகின்றதென்பதை இவ்விரு கருத்தரங்குகளும் எடுத்துக்காட்டுகின்றன என இந்நிலையத்தின் இயக்குநரான பிதா ஜோவ்றிங் கூறினார்.

மணிலாவுக்கு அண்மையிலுள்ள இந்த நிலையம் 1966 முதல் ஆசியத் திருச்சபை ஊழியர்களுக்கு இந்த

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எம்கருத்து

# கிறிஸ்துவில் ஒன்றிப்பு

ஒவ்வோர் ஆண்டும் தைமாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகின்ற ''கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்'' Unity Week சவுல், பவுலாக மனம்மாறிய விழா வன்று 25ஆம் திகதி முடிவடைகின்றது.

இந்த ஒன்றிப்பு வாரம் 2ஆம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பு இருந்தே கொண்டாடப்பட்டு வருகின்றது. 1908 ஆம் ஆண்டு அமெரிக்காவில் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த போல் வாற்சன் (Paul Waltsan) என்னும் குரு உரோமையுடன் எல்லோரும் ஒன்று சேர வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார். 'எல்லோரும் உரோமையுடன் தான் சேர வேண்டும்'' என்ற இவரது கருத்து பலரின் எதிர்ப்பையும், கசப்பையும், சந்தேகத்தையும் தூண்டிவிட்டாலும் தொடங்கப்பட்ட ஒன்றிப்பின் வாரம் கொண்டாடப்பட்டு வந்தது

இதன் பின் அபே போல் குற்றூசியர் (Abbe paul Coutousier) என்ற பிரான்சு தேசத்தைச் சேர்ந்த குரு சபைகள் எல்லாம் உரோமையுடன் ஒன்று சேர வேண்டும் என்ற கருத்தைச் சற்று மாற்றி ''சபைகள் எல்லாம் உரோமையுடன் அன்று கிறிஸ்துவில் இணைய வேண்டும்'' என்பதை வலியுறுத்தினார்.

இன்று கிறிஸ்துவின் பெயரால், கிறிஸ்துவைப் போதிப்பதற்காக எழுந்துள்ள குழுக்கள் எண்ணிலடங்கா. இவைகள் எல்லாம் ஒரே கிறிஸ்துவைத் தான் போதித்தாலும் அடிப்படைக் கருத்து வேற்றுமைகள் கிறிஸ்துவையே பிளவுபட்டவராகக் காட்டுகின்றன. மக்கள் இடறற்படும் அளவுக்கு வேற்றுமைகள் மலிந்திருக்கின்றன.

908ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ ஒன்றிப்புக்காகச் செபிக்கும் முயற்சி 1966இல் இருந்து ஜனவரி 18–25க்கு உட்பட்ட நாட்களில் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

ஞானஸ்ஞானத்தால் அனைவரும் கடவுளின் பிள்ளைகள் ஆக்கப்பட்டோம்; அடிப்படை உரிமைகளிற் பங்குகொண்டோம். இருந்தும் சில தீர்க்கப்படக் கூடிய முரண்பாடுகளிற் கருத்தொற்றுமை ஏற்பட முடியாது தவிக்கின்றோம்.

கிறிஸ்தவ ஒற்றுமைக்காக நாம் மன்றாடுகின்றோம். ஏனெனில் கடவுள் ஒருவரே நம்மத்தியில் உருவாக வேண்டிய அருளை நமக்குக் கொடையாகத் தரவல்லவர். நாம் ஒன்றாக இதற்காகச் செபிக்கும் போது அந்த ஒற்றுமை உருவாகக் காரணராகின்றோம்.

மனித வாழ்வில் ஒருமைப்பாட்டுக்கு ஒப்புரவு அவசியம். மனித பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு குறைகளைக் களைந்து ஒருமைப்பாட்டை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான வழிபாடுகள் பல்வேறு மட்டங்களிலும் கூட்டாக நடத்தப்படவேண்டும் என திருச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. ஒவ்வொரு மறைவட்டத்திலும் இதற்கான ஆணைக் குழு அமைக்கப்பட்டு இம்முயற்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது.

கிறிஸ்தவ சமூகக் குழுக்களிடையே உள்ள அடிப்படைக் கருத்து ஒற்றுமைகளை மையமாக வைத்து, உடன்பாட்டைக் கட்டி எழுப்ப முடியும் என்ற நம்பிக்கை எல்லோரிடமும் உள்ளது.

தப்பறையான போதகங்கள். எப்போதும் எதிர்க் கிறிஸ்துக்களாக வந்து நம்மிடையே பிளவுகளையும், வேற்றுமையையும் வளர்க்கும். பிரிவினைகளையும், தடைச் சுவர்களையும் இனங்கண்டு தவிர்த்து ஒற்றுமையை வளர்ப்போம். கிறிஸ்துவில் ஒன்றித்து மகிழ்வோம்.

# அப்போது புரிந்தது

அது டவுன் (Town) என்றோ; பட்டி என்றோ சொல்ல முடியாத ஒரு வகைப்பட்ட நடுத்தர ஊர். ஆனால் வயல்வெளிகள் பச்சைப்பசேல் என குளுமையாக இருக்கும் பச்சையைக் காப்பாற்ற ஊரின் ஒதுக்கு புறமாக செல்லும் ஆறு, வற்றாத ஜீவநதி என்று சொல்ல முடியாவிட்டாலும் பஞ்சம் என்றசொல் இன்னும் ஊரை எட்டிப் பார்க்கவில்லை.

ஒரு சின்ன பழக்கடையாக ஆரம்பித்து, சில்லறையாக விற்றுப்பின் மொத்தவியாபாரமாக வளர்ந்தது ஆனந்தம் பழக்கடை. பின்னர், 'பழக்கடை ஆனந்தம்' என்ற பெயரே ஆனந்தத்துக்கு நிலைத்து விட்டது. மொத்தம் குடும்பத்தில் ஐந்துபேர், ஐந்தும் ஆண்கள். சின்னவயதில் குடும்பம் பெரிய கஷ்டத்தில் தத்தளித்தது. தற்போதைய இலங்கை போல ஆனந்தம் தான் மூத்தவன்.

உணவுக்கு மிகுந்த கஷ்டப்பட்டகாலத்தில், தாயார் தான் வீட்டுவேலைசெய்து வளர்த்தாள். படிப்படியாக ஆனந்தம் கடைவளர்ந்ததும் குடும்பம் ஒரு வழியாக தலைநிமிர்ந்து நின்றது ஆனந்தம் அதே தெருவில் வசித்த இராசாத்தியை மணம் செய்தான் சின்னப் பெண் என்றாலும்,

எழுதியவர் — R. நந்தினி

அன்பான, பொறுப்பான பெண் வாழ்க்கைப் படகில் பயணம் செய்த பொழுது மூன்று குழந்தைகள் பிறந்தன. ஆனந்தத்துக்கு இரண்டுபெண். ஓர் ஆண் அமைதித் தென்றல் வீச வாழ்க்கைப் படகு கால நதியில் மகிழ்ச்சியாக ஓடிக் கொண்டிருந்தது.

கடைசித்தம்பிக்கு திருமணம் நடந்து ஒரே குடும்பமாய் வாழ்ந்து கொண்டிருந்த சமயம் தான் பிரச்சினைப்புயல் தலை தூக்கியது. மற்ற மூன்று தம்பிகளும் திருமணம் முடிந்து, வெவ்வேறு இடங்களில் இருந்தனர். அதில் ஒரு குடிமகனும் உண்டு ஒற்றுமையுடன் இருந்த அண்ணன் தம்பி இடையே இலேசாக ஒரு மெல்லிய பிளவு வளர்ந்து வந்தது அண்ணனுக்குத் தெரியாமல் தம்பி கொஞ்சம் கொஞ்சமாக சில்லறை சேர்க்க, சுரண்டத் தொடங்கி விட்டான்.

இதற்குக் காரணம் உஷா தம்பியின் மனைவி. கூடவே அவள் தயார்வேறு பண்டிகைக் காலங்களில் அண்ணன் ஆனந்தம் தன் மனைவிக்கு ஒரு புடவை எடுத்தான் என்றால் உஷா அதைவிட உயர்ந்த விலைக்கு புடவை எடுக்க ஆரம்பித்தாள். சமையல் முதல் குடும்பநிர்வாகம்வரை ஒன்றாக இருந்தாலும், உஷாவின் கைங்கரியத்தால் அவனின் செலவுகள் அதிகரிக்கத் தொடங்கின. ஆனால் இராசாத்திக்கோ செலவு அவசியமானதில் மட்டும் தான்.

'இப்படி ஒரேடியாக அண்ணனுக்கே உழைத்தால் நம் குடும்பம் என்னாவது?... குழந்தைகள் பிறந்தால் அதன் நிலை?'

வருமானம் வடியத் தொடங்கியது. ஆனால் வீட்டுச் செலவோ பல மடங்காகியது உஷாவின் ஆடம்பரச் செலவுகள் நாளுக்கு நாள் அதிகரித்தன.

குத்தகை எடுத்த வாழைத் தோப்புக்கள் காற்றில் சீரழிந்

## சாதனை

தாயும் மகளும் சிண்டு முடித்தனர் அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்பது போல் தம்பியும் அதிகம் செலவு பண்ண ஆரம்பித்தான். கடை வருமானம் பொது தான் என்றாலும் இவனின் செலவு மட்டும் தனியே பெரிதாக வளர்ந்தது ஆனந்தம் வாழைத் தோப்பு குத்தகை விஷயமாக வெளியூர் செல்லும் போது தம்பிதான் கடையில் இருப்பான். படிப்படியாக லாபம் தந்த கடையில் தன ஒரு அரசியல் மகானுபாவன் நடத்திய போராட்டத்தில் சிக்கிய பழங்கள் அனுப்பிய லாரி நான்கு நாள் மறியலில் அழுகிப் போனது. ''கடையில் பாகம் பிரிக்க வேண்டும்'' உஷாவும் அவள் தாயும் ஓதிய வேகத்தில் தம்பிமிழற்றினான். ''கொஞ்சம்பொறுத்துக்கடா... இது கஷ்டமான நேரம். நாள் நல்ல நிலைக்கு வரட்டும். பின்னால் பிரிச்சுக்கலாம்'' ஆனந்தம் பரிதாபமாகப் பேசினான்.

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

# இளந்தலைமுறையினருக்கு அழைப்பு

நிவாரணம் தேடும் யுகமாக மாறிவிட்டது இன்றைய உலகு. இதில் எங்கும் எதிலும் விரக்தியின் விளிம்பில் நம்பிக்கையற்ற வாழ்வை தரிசிக்கும் உருவங்களாக, உயிரைத் துச்சமாக மதிக்கும் காலத்தில் உன் இளமை உணர்வுகளுக்கு ஏற்பட்டு உள்ள சவாலை ஏற்று வாழ்வாயா அல்லது எதிர்த்து வாழ்வாயா? இதுதான் இன்றைய இளைய தலைமுறைக்கு முன் எழும்சவால்.

அகதியாக அலைபவனும், ஆதரவற்ற அனாதைகளும், அல்லலுற்று நோய் நொடியால் வாடும் ஜீவன்களும், உன் கரத்தைத்தான் எதிர்பார்க்கிறது. இதில் இருந்து ஒதுங்குவதா? பங்கேற்பதா? அழைப்பு விடும் காலத்தில் அதற்கு செவி சாய்க்காதுவிட்டால் அடுத்த தலைமுறையின் வழிகாட்டிகள் என எவரை எதிர்பார்ப்பது எங்கே தேடுவது? ஏன் முடியாது உன்னால்.

ஒரு தலைமுறையின் வழிகாட்டியை அந்த சமூகத்தில் இருந்து தான் உருவாக்க வேண்டு. அந்த வழிகாட்டியாக மாறி அழைப்பை ஏற்று நல் வழிகாட்ட, நற்செய்தியைப் பகிர, நற்பணியாற்ற இன்றய இளைய தலைமுறையினரை எதிர்பார்க்கும் பாசறைகளாக பல துறவறப்பணித்தளங்கள் காத்திருக்கின்றன.

சிலுவை சுமக்கும் பாதை என ஒதுங்கிவிடுவாயா? சுமைகள் தீர்க்கும் பணியில் உன்னை இணைத்து விடுவாயா? இவற்றுக்கு உன் உள்ளத்தில் எழ வேண்டிய பதில் என்ன? அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு என அழைப்பு விடப்படுகிறது. இக்குறையை நிறைவாக்கும் பணியில் பலரது நல்வாழ்விற்கு நற்செய்தி ஊட்டி நல்வழிகாட்ட உன்னால் முடியும். திக்கற்றவர்களின் திசைகாட்டியாக உன் வாழ்வை அமைக்கத் தயக்கம் வேண்டாம். துணிவோடு இணைந்து பணிவாழ்வில் பதில் சொல்.

— சூசை

# சிந்தனைத் துளிகள்

- நீ உனது சிறுமையை உணர்; இறைவன் உனது பெருமையை வெளிப்படுத்துவார்.
- என்று தற்பெருமைக்கு இடம் கொடுக்கின்றாயோ அன்றே உனது வீழ்ச்சி ஆரம்பமாகின்றது.
- நமது மனமென்னும் ஆணிவேர் அறும்பொழுது நமது வாழ்வென்னும் மரத்திலுள்ள நற்பண்புகள் எனும் இலைகள் உதிரத் தொடங்குகின்றன.
- நன்மை செய்வதும் மன்னிப்பதும் எளிது. ஆனால் செய்த நன்மையையும், அளித்த மன்னிப்பையும் பிறருக்குக் கூறாது வாழ்வது மிகக்கடினம்
- தெய்வத்தின் உருவங்களை மறைத்துவிடலாம்; தெய்வத்தின் கண்களை உன்னால் மறைக்க முடியாது.

T. யூட், இளவாலை.

வீட்டுக்கொரு பாதுகாவலன் · உங்கள்பங்கில் நடைமுறைப்படுத்துங்கள்

# 1990களை நோக்கி......

## தூரத்துப்பார்வை அமதிகள் மாநாடு

இப்பகுதியில் வெளியாகும் கருத்துக்கள் சிந்தனைகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

கரவையூர்ச் செல்வம்

(10)

### இணைப்பு

16-02-1990 வெளிவந்த காவலன், ''நவம்பர் 4 முதல் 10 வரை யாழ். தொடர்பகத்தில் அ ம. தி. களின் மகாநாடு; எதிர்காலப் பணிகளைப் பற்றித் திட்டம் தீட்ட வரலாற்று முக்கியத்துவமான ஒரு மகாநாடு'' என்று தலைப்புக் கொடுத்து ஒரு செய்தி பிரசுரித்தது. இதைத்தொடர்ந்து 02 03-1990 துவங்கி வாரந்தோறுமாக ஒன்பது கட்டுரைகள் காவலனில் பிரசுரமானதை வாசகர்கள் படித்திருப்பார்கள். மகாநாட்டிற்கு ஆயத்தமாக வெளிவந்த இக்கட்டுரைத் தொடர், ஈழப்போரின் மூன்றாவது கட்டம் ஆரம்பமானதும் கைவிடப்பட்டது, அப்பொழுது அமதிகளின் யாழ் மாகாண முதல்வர் அருள்திரு ஓயி பொன்னையா, அ. ம. தி. அவர்கள் காலவரையின்றி மாநாட்டைப் பின்போட்டார்.

இப்பொழுது, மாகாணத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள அருள்திரு பி. பி. பிலிப், அ. ம. தி. அவர்கள், 25-11 1991 இல் தொடர்பகத்தில் நடைபெற்ற அமதிகளின் கூட்டமொன்றில் இம்மாநாட்டை இவ்வருடத்தில் (சித்திரை/வைகாசி) நடாத்துவதென முடிவு செய்துள்ளார். ஆகவே, காவலன் ஆசிரியரின் துணையுடன் இக்கட்டுரைத் தொடரை நாமும் தொடருகின்றோம்.

**தொகுப்பு :**

அமதிகளின் யாழ். மறைவட்டப் பின்னணி, அமதிகளின் வடமாகாண வரலாறு, அவர்களின் இன்றைய நிலைப்பாடு போன்ற விடயங்கள் ஏற்கனவே பிரசுரமான ஒன்பது கட்டுரைத் தொடரில் ஆராயப்பட்டது, அந்தப் பின்னணியில் மேலும் தொடர்கின்றோம்.

**பாதிக்கும் மாற்றங்கள்**

01. **மாகாணப் பிரகடனம்**
அனைத்து அமதிகளின் குரு முதல்வர் பேரருட் திரு மார்செல்லோ சாகோ, அ ம தி. அவர்கள் முதன்முறையாக 1990 ஆவணித் திங்களில் (23-08-1990) யாழ் நகர் வந்திருந்தார். இந்த வருகையைப் பயன்படுத்திக் கொண்டு, அவர் வடபகுதி அமதிகளின் ஆணைப் பேராண்மையை (Delegation) ஓர் உப மாகாணமாக (Vice province) உயர்த்தி உள்ளார். நிர்வாக அதிகார ரீதியாகப் பார்க்கும் பொழுது, அனைத்து உரிமைகளையும் பெற்ற ஒரு மாகாணமாகவே வடபகுதி அமதிகளின் அமைப்பு செயல்படும். வடபகுதி அமதிகளின் ஒன்றரை நூற்றாண்டு வாழ்வில் இந்தப் பிரகடனம் ஒரு முக்கிய திருப்புமுனை என்பது இவ்விடத்தே குறிப்பிடப்பட வேண்டும்.

02. ஆனி 19, 1991 இல் யாழ். மாகாண அமதிகள் ஒரு முதல்வரையும் ஒரு புதிய ஆலோசகர் குழுவையும் பெற்றார்கள். அருள்திரு பி.பி. பிலிப் பெர்ணாண்டோ, அ.ம.தி., (முதல்வர்), பி. யேசுநேசன், அ. ம. தி., சா. ம. செல்வரட்ணம், அ.ம தி., டானியேல் பிரான்சிஸ், அ.ம.தி., (ஆலோசகர்கள்), ஏ ஜெயசிங்கம் அ, ம. தி., (பொருளாளர்) இக் குழுவை நிறைவு செய்பவர்கள்.

03. அத்துடன், புரட்டாசி 17, 1988 இல் தெரிவு செய்யப்பட்ட ஆயத்தக் குழுவிலும் மாற்றம் ஏற்பட்டது. தலைவராக நியமிக்கப்பட்ட அருள்திரு ம. வ. இராயப்பு, அ.ம.தி. அவர்கள் வைகாசி 6, 1991 இல் இறந்து படைத்தவன் படைப்புடன் சங்கமமானார். அவரின் இடத்திற்கு யாழ். மறைவட்ட முதல்வர் அருள்திரு எஸ் ஏ. மைக்கல்சாமி, அ. ம தி. தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். சா ம. செல்வரட்ணம், அ. ம தி., பொதுச் செயலர் ஆகவும். பி. யேசுதாசன், அ, ம. தி. எவ். எல். என். குருஸ், அ, ம தி. உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## அப்போது...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்பத்தில் மகிழ்ந்து சுரண்டியவர்கள் துன்பத்தில் பிரிந்து ஓட முற்பட்டனர். என்ன ஜென்மங்களோ! நிலைமையை சரி செய்ய கடன் வாங்கினான் ஆனந்தம் தன் பேரிலேயே. கடன் மட்டும் ஆனந்தனுக்கு லாபசதில் சுருட்டிய தம்பி, இக்கட்டில் நழுவப்பார்த்தான், பிரச்சினை முற்றியது. குடும்பத்தை இக்கதிக்கு கொண்டு வந்த உஷா வேறு வீடு பார்க்க, தனிக் குடித்தனம் என்றான் தம்பி. அவனுக்கு இரு குழந்தைகள் பிறந்தன. கடன் சுமை காரணமாக நெருக்கடி மிகுந்தது. தம்பியோ கண்டு கொள்ளவேஇல்லை. இந்த நிலையிலும் சுருட்டவே தொடங்கினான்.

கூட்டாக இருந்தபோது இருந்த வசதி, மகிழ்ச்சி இரு குடும்பங்களிலும் இழக்கப்பட்டது. குடும்பம் வறுமை நிலையை நோக்கி நடைபோட்டது. கடன் கொடுத்தவர்கள் நெருக்கினர். அதில் ஒருவர் நடுத்தெருவில் பலபேர் முன்னிலையில் ஏசிப்பேசி பணத்தை திருப்பிக் கேட்க மிக்க அவமானமடைந்தான் ஆனந்தன், மனம் உடைந்தான். நாட்டில் சில அறிவிலிகள், வாழத் தெரியாத முட்டாள்கள் போல அவனும் ஒரு வழியைக் கையாள முயன்றான். அப்போது எதிர்பாராமல் அங்கு வந்த இராசாத்தி அவனை தடுத்து நிறுத்தினாள். ''என்னங்க நிறைய அனுபவம் கொண்ட நீங்களே இப்படிச் செய்யலாமா? நீங்கள் சாவதால் மட்டும் இந்தப் பிரச்சனை தீர்ந்து விடுமா? இந்த இக்கட்டிலிருந்து நீங்கள் மட்டும் தப்பி செல்லும் சுயநலம்தானே இது? உங்களுக்கு பிறகும் என்னை ஆனந்தம் மனைவி என்றுதானே சொல்வார்கள்? அப்போது நான் தனித்திருந்து கஷ்டப்படுவது உங்களுக்கு திருப்தியா?'' என்று கேட்டு அழுதாள்.

அப்போது விளையாடிவிட்டு தெரு புழுதியோடு வந்த கடைக்குட்டி அப்பா என்று ஓடிவந்து கட்டிக் கொண்டது. இவ்வளவு அருமையான மனைவியையும் குழந்தைகளையும் தவிக்க விட தன் நெஞ்சு துணிந்ததே என்று வெட்கப்பட்டான். ''அழாதே! இராசாத்தி இனிமேல் இப்படி நினைக்கக் கூட மாட்டேன். நீங்கள் தான் என் செல்வங்கள். இன்றிலிருந்து நான் புது மனிதன்'' என்றான். அப்போது பக்கத்து வீட்டு ரேடியோவிலிருந்து, ''அண்ணன் என்னடா தம்பி என்னடா. அவசரமான உலகினிலே ஆசை கொள்வதில் அர்த்தம் என்னடா. 'காசில்லாதவன் வாழ்க்கையிலே''...... என்ற கானம் காற்றில் மிதந்து வந்தது. அதன் முழுப் பொருளையும் அப்போது தான் உணர்ந்தான் ஆனந்தன்.

## காவலன் கண்மணிகள்

| ஒளி : 6<br>சுடர் : 2 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

**என்னகம் : 2**

**அன்புக்கினிய கண்மணிகாள்!**

புதுவருடம் பிறந்து, புது வகுப்புள் சென்று பூரித்திருக்கும் உங்கள் புன்னகையின் அர்த்தம் புரிகிறது.

மின் விளக்கின்றி, மண்ணெய் அருந்தலிலும் மங்கிய ஒளியில் இடம் மாறி இடம் ஓடிய நிலையிலும் கல்வியைக் கற்றுத் தேர்ச்சி பெற்றதை எப்படிப் பாராட்டுவது? இறையுணர்வில் ஊறிய உங்களுக்கு இறைவழிகாட்டும் என்பதை உணர்ந்த உங்களுக்கு என்றும் இறையேசு வழியும் ஒளியுமாக இருப்பார் என்பதை உங்கள் தேர்ச்சி காட்டிநிற்கிறது.

புதிய வருடத்தில், சென்ற வருடத்தில் நீங்கள் விட்ட தவறுகளை நினைத்துப் பார்த்து அவற்றைத் திருத்திட திட சங்கற்பம் செய்யவேண்டும்.

பள்ளிக்கூடத்தைத் தங்குமடமாக நினையாது, எதிர்கால வாழ்வின் பயிற்சிப் பாசறை என்ற இதய உணர்வுடன் பள்ளிக்கூடத்தின் வளங்களை வளமுடன் பெற்று உடல், உள, ஆன்மிகப் பலமுள்ளவர்களாக வாழ இறை யேசுவிடம் வேண்டும்.

உங்கள் அன்பின்,
அன்பு விழி

### அருள் வாக்கில் வழிபடுவோம் வாழ்வோம்

சங். 89 : 11 – 17

1 உமது கோலத்தின் வல்லமையை உணர்ந்தவன் யார்? உம்மிடம் காட்டவேண்டிய அச்சத்திற்கு ஏற்றபடி உம் கடுஞ்சினத்தை அறிந்தவன் யார்?
2 உள்ளத்தின் ஞானத்தை அடையுமாறு, எங்கள் வாழ்நாளைக் கணிக்க எங்களுக்குக் கற்பியும்.
3 ஆண்டவரே திரும்பி வாரும்; எவ்வளவு காலம் கோபம் கொள்வீர்? உம் ஊழியர்மீது இரக்கம் வையும்.
4 உம் இரக்கப் பெருக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்; எம் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து அகமகிழ்வோம்.
5 எங்களை நீர் தண்டித்த காலத்திற்கும், எங்கள்மீது துன்பங்கள் வந்த காலத்திற்கும் ஏற்றவாறு எங்களை மகிழ்வித்தருளும்.
6 உம் திருச்செயலை உம் அடியார்கள் காண்பார்களாக: அவர்களுடைய மக்களுக்கும் உம் மகிமை விளங்குவதாக.
7 நம் ஆண்டவராகிய கடவுள் இன்முகம் காட்டுவாராக. எங்கள் வேலைகளைப் பயனுள்ளவை ஆக்கும்.

### யார் இவர்?

இவர் பிரான்சு தேசத்தைச் சேர்ந்தவர். மெய் மறையில் சேர்வதற்கு முன்பே, மறை நூலில் தெளிவான அறிவைப் பெற்றிருந்தார் பூவாசியே என்ற நகரின் ஆயராக இருந்தவர் அன்புநிறை இயேசுவின் தெய்வத்தன்மையை மறுத்த ஆரியப் பதிதத்தை முறியடிக்க முழு மூச்சுடன் உழைத்தவர். வேத விரோதியான யூலியன் இவரை நாடுகடத்தினான். தூய தம திரித்துவத்தைப்பற்றிப் பல நூல்கள் எழுதினார் தை 13 இவரது திருநாளாகும். இவர் வாழ்ந்த காலம் கி. பி. 315 — 368 ஆகும்.

### அன்புக்காக உன்னைக் கொடு

சூரியன் தன்னை எரித்தே உலகுக்கு ஒளி கொடுக்கிறது.

மெழுகு தன்னை உருக்கியே மற்றவர்கட்கு ஒளி கொடுக்கிறது.

விருட்சங்களும் கதிரவனின் வெப்பத்தைத் தான் தாங்கி தனக்குக் கீழ் உள்ளோருக்கு நிழல் கொடுக்கிறது.

மிருகங்களும் தம் இனப்பெருக்கத்திற்காகவும், தம்மை வளர்ப்பவனுக்காகவும் தங்களை இழந்தே வாழ்கின்றன.

பறவையினமும் தம் இனத்தை இறக்கைக்குள் காத்து அன்பையே பிரதிபலிக்கின்றன.

இறைவனின் படைப்பெல்லாம் அன்பையே பறைசாற்றுகின்றன.

இறைமகனும் இறங்கிவந்து, இரட்சணியத்திற்காக உயிர் கொடுத்து, அன்பென்றால் என்னவென்று காட்டினார்.

— என் நெஞ்சே, அன்புக்காக உன்னைக் கொடுக்கத் தயங்குவாயானால் ... நீ ஏன் வாழ்கிறாய்?

விமல்

நன்றி : உன் இதயத்தைக் கேட்கிறேன்:

பாதுகாவலன்
PATHUKAVALAN

## கிறிஸ்தவ குழுக்களின் கோரிக்கை

ஹாங்கொங்கிலுள்ள 20 கிறிஸ்தவ குழுக்கள் நோபல் சமாதானப் பரிசு பெற்றவரான ஆவுங் சான் சூ கீயை விடுவிக்குமாறு மயன்மார் (பர்மா) ஆட்சியாளருக்கு கோரிக்கை விடுத்துள்ளன.

கத்தோலிக்கம் புரட்டஸ்தாந்தரும் அடங்கிய இக்குழுக்கள் ஆவுங் சான் அகிம்சை வழியில் சனநாயகத்துக்காகப் போராடுவதில் சர்வதேச மதிப்புப் பெற்றவர் என்றும் அவரது உடல்நிலை பாதிக்கப்படாவண்ணம் அவரை விடுவிக்க வேண்டுமென்றும் கேட்டுள்ளன.

மயன்மாரின் இராணுவ ஆட்சியாளர் எதிர்க்கட்சியாகிய தேசிய சனநாயக சங்கத்தின் பொதுக்காரியதரிசியாகிய ஆவுங் சானை 1989-ல் வீட்டுக்காவலில் வைத்தது. 1990ஆம் ஆண்டுத் தேர்தலில் தேசிய சனநாயக சங்கம் பெரும் வெற்றியீட்டியது. ஆனால் ஆட்சியாளர்கள் அதிகாரத்தை அதனிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டனர்.

ஆவுங் சானையும் காவலில் வைக்கப்பட்டுள்ள ஏனைய சனநாயக சங்க உறுப்பினரையும் விடுவிக்குமாறும் அவர்களை தடுத்து வைப்பது மனித உரிமைகள் சாசனத்துக்கு மாறானது என்றும் கிறிஸ்தவக் குழுக்கள் கூறியுள்ளன.

அத்துடன் நோபல் பரிசு பெற்றமைக்காக ஆவுங் சானுக்கு இக்குழுக்கள் தமது பாராட்டைத் தெரிவித்துள்ளன.

# சலேசிய சபையினரின் திட்டங்கள்

சலேசிய சபையைச் சேர்ந்த 25 உருவாக்குநர்கள் நவம்பர் மாத முற்பகுதியில் கல்கத்தாவில் கூடி குருக்கள், கன்னியர், பொதுநிலையினர் பற்றிய ஆய்வின் மூலம், தமது சபைக்கு ஆட்சேர்ப்பதற்கு புதிய உபாயங்களை ஆலோசித்தனர்.

சலேசிய குரவர் பிதா பீற்றர் ஹூட்ஸ் ''குருக்களின் மனித முகம்'' என்பது பற்றி ஆராய்ந்த மூன்று பேர் கொண்ட குழுவுக்குத் தலைமை வகித்தார். இந்த ஆய்வில் இந்திய குருக்கள் பொதுநிலையினரிடமிருந்து வேறுபட்ட ஆளுமைப்பண்புடையவர்கள் என்பது தெளிவாயிற்று.

தற்போது உருவாக்கத்தில் பேணப்படும் ஆன்மீகம் அதிக பயன் அளிப்பதில்லை என்றும் பணிக்கு ஓர் அர்த்தத்தைக் கொடுக்கும் ஆன்மீகமே வேண்டும் என்றும் அவர்கள் கருதினர் சலேசிய மாநிலங்களான பெங்களூர், பம்பாய், கல்கத்தா, திமாப்பூர், குவாஹத்தி, சென்னை ஆகிய இடங்களில் ஆட்களைத் தெரிவதற்கு வெவ்வேறு முறைகள் கையாளப்படவிருக்கின்றன.

## நேபாள கத்தோலிக்க பொது நிலையினரின் எதிர்கால நோக்கு

நேபாளத்தில் குருக்கள் கன்னியர், பொதுநிலையினர் நவம்பர் 9 ஆம் திகதி ஒன்று கூடிய போது 1997 இல் கத்தோலிக்க சமுதாயம் பற்றி கலந்துரையாடினர். முக்கியமாக பொதுநிலையினர் தமது கருத்தை வெளியிட வாய்ப்புக் கிடைத்தது. 1997 இல் பல புதிய ஆலயங்கள், பங்குகள், பாடசாலைகள், இளைஞர், பெற்றோருக்கான சங்கங்கள் உருவாகுமென அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

அத்துடன் கத்தோலிக்க சமுதாயத்தில் பல வைத்தியர்கள், வழக்கறிஞர்கள். பொறியியலாளர்களும் பிறரும் இருப்பார்களென்றும் இளைஞரிடத்தில் தேவ அழைத்தல்களும், பிறமதத்தவருடன் நல்லுறவும், பொதுமக்கள் குருக்களுக்கிடையில் ஒத்துழைப்பும், தேசியமட்டத்தில் பொது நிலையினரின் இயக்கமும் இருக்குமென அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அத்துடன் அவர்கள் கிருவருகைக்காலம், நத்தார் காலத்துக்குரிய திட்டங்களையும் வகுத்தனர். இதற்கென கரோல் பாடல்கள், குடும்ப செபக் குழுக்களை புதுப்பிக்க விரும்பினர்.

பிதா லியோ கச்சாட் என்பவர் இக்கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

## திருத்தந்தை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாற்றலுடனும் நீங்கள் ஆண்டுவரும் மக்கள் மத்தியில் நீங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவர் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

இறுதியில் தெய்வீக ஆயர் பரலோக வரங்களை உங்கள் மீது ஏராளமாகப் பொழிந்தருள வேண்டுமென்று அவரை இறைஞ்சுகின்றோம். உங்களது கடந்தகால உழைப்புக்கு அவரே தக்க வெகுமானத்தை அளிப்பாராக. அதே வேளையில் வணக்கத்துக்குரிய சகோதரரே, உங்களுக்கும், நற்செய்திப் பணியாளர் அனைவருக்கும், முழுச் சமூகத்திற்குமே எல்லோருக்கும் ஆறுதலளிக்கும் படியாக தாராளமாக எமது அப்போஸ்தல ஆசியை அளிக்கின்றோம். அது எமது பொது ஒருமனப்பாட்டின் அடையாளமாக இருப்பதாக.

இது வத்திக்கான் நகரில் கிறிஸ்து ஆண்டு 1991 நவம்பர் 28ஆம் நாள் எமது ஆட்சியின் 14வது ஆண்டில் அளிக்கப்பட்டது.

2ஆம் அருள் சின்னப்பர்

## ஆசிய குருக்களுக்கு மறைபோதக உருவாக்கம் அவசியம்

குருக்களின் உருவாக்கம் பற்றிய ஒரு கருத்தரங்கு ஆசிய ஆயர் பேரவையின் கல்வி மாணவர் பணிக் குருத்துவ அலுவலகத்தினால் கடந்த அக்டோபர் மாதம் மணிலாவுக்கு அண்மையிலுள்ள மேரிறிட்ஜ் என்னுமிடத்தில் நடத்தப்பட்டது. ஒன்பது ஆசிய நாடுகளிலிருந்து 68 குருத்துவக்கல்லூரிப் பேராசிரியர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். அங்கு பின்வரும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

நேரடியான அப்போஸ்தல பணியின் மூலம் மறைபோதக மனப்பான்மை உருவாக்கப்பட வேண்டும். ஆசிய நாடுகளில் ஒரு குரு இறைவனின் மனிதராக, கிறிஸ்துவின் சீடராக, மக்களின் ஆயனாக மட்டுமல்லாது மக்களின் முக்கியமாக ஏழைமக்களின் மனிதனாக இருக்கும்படி அழைக்கப்பட்டுள்ளார்.

மனித மாண்பு, மனித உரிமைகள், நீதி, சமாதானம் ஆகிய விடயங்களில் இறைவாக்குரைப்பவராகவும், அகிம்சையிலும், அநீதியை எதிர்ப்பதிலும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவராகவும் விளங்க வேண்டும்.

அத்துடன் எதிர்காலக் குருவானவர் ஆசியத் திருச்சபை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

குருமாணவரை தமது நாட்டின் கலாச்சாரம், பழக்க வழக்கங்கள். பாரம்பரியங்களிலிருந்து அன்னியப்படுத்தும் அம்சங்கள் நீக்கப்படவேண்டும்.

குருமாணவர் ஒரு முழு மனிதராக உருவாக்கப்படவேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டது. கட்டுப்பாடு, அதிகாரத்துக்கு கீழ்ப்படிதல். ஆகியவற்றுடன் அவர்கள் குழுவாக செயற்படுவதற்கு வேண்டிய மனித உறவுத்திறன்கள் விருத்தி செய்யப்படவேண்டும்.

பெரும்பாலான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஆசியநாடுகளில் இறைவனின் மனிதர் எளிமையான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், எளிமையும், பற்றற்றதன்மையும் இல்லாத ஒரு குரு ஏனைய ஆசிய மதத்தலைவர்களுக்கு முரணாகக் காணப்படுவார் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

## ஆசியத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம் புதுப்பித்தல் நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து வந்துள்ளது.

வழக்கமாக 7 மாதத்திற்கு நடத்தப்படும் பயிற்சி இம்முறை இரு பகுதிகளாக 15, 24 வாரங்கள் நடத்தப்படும். கடந்த 25 ஆண்டுகளில் சுமார் 3000 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். மாணவருள் 80 வீதமானோர் பிலிப்பைனுக்கு வெளியேயுள்ள 15 நாடுகளிலிருந்து வந்தவராவர்.

## 1990களை நோக்கி... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

04. மாநாட்டைக் காலைவரையின்றிப் பின்போட்டமையினால் ஏற்பட்ட தொய்வும், அதனால் அங்கத்தவர்களிடையே ஏற்பட்ட சோர்வும் மாநாட்டைப் பாதிக்கும் ஒரு மாற்றமாகவே கருத வேண்டும்.

மாநாட்டிற்கு ஆயத்தம் செய்யும் படிமுறையையும், மாநாட்டின் போக்கையும் முடிவுகளையும் இம்மாற்றங்கள் பாதிக்கும் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை. ஆகவே தான், இம்மாற்றங்களைக் கோடிட்டுக் காட்டுகின்றேன் அத்துடன் வரலாற்று வழியாகப் பார்க்குமிடத்தும் இம்மாற்றங்கள் எங்ஙனம் மாநாட்டின் போக்கினையும். உரையாடல் – விவாதங்களையும், ஈற்றில் மாநாட்டுத் தீர்மானங்களையும் பாதிக்கும் என்பது ஆராயப்படவேண்டிய ஒன்று.

மேலும் முக்கியமாக, மாநாட்டின் தீர்மானங்களை அமுலாக்கும் முயற்சிகளை மேற்கூறிய மாற்றங்கள் நன்மைக்கோ தின்மைக்கோ பாதிக்கும். மாநாட்டில் நேரடியாகப் பங்குகொள்பவர்களும், வாசக அன்பர்களும் இதைக் கவனத்தில் கொள்வது நல்லது.

(வளரும்)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஞானபிரகாசம்
பாக்கியம்மா (குணம்)

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்.

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 13-10-1920 | 31-01-1991 |



இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஆனையூர் புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் 01-02-1992 சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

''ஞானகுணவாசா''
உயரப்புலம்
ஆனைக்கோட்டை

இவரது பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

A/3/92

### வாழ்வோர் நாட்டில் நிறைந்த பத்தாம் ஆண்டில்



சு. அந்திரேஸ்பிள்ளை

நீ செய்த நன்மை
நினைக்கின்றேன்
என் நெஞ்சுருக நன்றி
சொல்கின்றேன்.

அன்பு மனைவி மக்கள்
உறவினர்

24-1-92 A/2 92

## அருள்திரு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரவளை திரு இருதயக் குருமடத்தில் நவசந்நியாசப் பயிற்சி பெற்ற இவர், மெய்யியல் கல்வியை கண்டி தேசிய குருமடத்திலும், இறையியல் கல்விப் பயிற்சியை உரோமாபுரி புனித கிரகோரியார் பல்கலைக்கழகத்திலும் பெற்றார். 7.12 1990 இல் அமலமரித்தியாகியாக நித்திய அர்ப்பணம் செய்து கொண்ட புதிய குருவானவர் 8.12.1990 இல் திருத்தொண்டராக உயர்த்தப்பெற்று பண்டத்தரிப்பு, பள்ளிமுனைப் பங்குகளில் பணியாற்றினார்.

புதிய குரவர் தமது சொந்த ஊராகிய மாரீசன்கூடலில் உள்ள புனித கயித்தார் ஆலயத்தில் 25.1.1992 காலை 7மணிக்கு தமது முதல் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இல. QB/1001/58/81

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**